எம்.ஜி.ஆர். மட்டும்தான் அவருக்கு முன்மொழிந்தார் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. நன்றியை மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. போதும், போதும். திரு. எ.வ. வேலு, சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் விவாதம். . .(குறுக்கீடுகள்) இது சரியில்லை. இது சரியில்லை. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் வாய்ப்புக் கேட்பதை, என்னை மிரட்டுகிற மாதிரி கேட்கக் கூடாது. அது முறையல்ல. இதை நான் ஏற்றுக்கொள்ள போவதில்லை. அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதை மறுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரின் பதிலுரை பிற்பகலில் தொடரும்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) பிற்பகல் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிற பேரவை அலுவல் முற்பகலுக்கு மாற்றப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம்–3–ல் இடம்பெற்றுள்ள அரசினர் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பெறுதல் குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் பிற்பகல் 4–30 மணிக்கு மானியக் கோரிக்கைகளுக்கு பின்னர் எடுக்கப்படுவதாக உள்ள இனம்–3 அரசினர் தீர்மானங்கள் தற்போது எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்றும், ஏனையவை ஏற்கெனவே அறிவித்துள்ளபடி தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–30

(ஆ) பேரவைக் குழுக்களின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பாண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195(2), 203(3), 211(3) மற்றும் 256(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)